தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 19-8-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வள்ளுவன் வாக்கைப் பின்பற்றினால் இளைஞர்கள் வாழ்க்கையில் வெற்றியடையலாம் - திருவள்ளுவர் விழாவில் வேளாண்துறை இயக்குநர் தகவல்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவர் மன்றத்தின் சார்பில் திருவள்ளுவர் விழா 2015 நடைபெற்றது இவ்விழாவில் திருக்குறளைப் பற்றிய பல்கலைக் கழக அளவிலான போட்டிகளும் கருத்தரங்கமும் நடைபெற்றன. மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் படி பல்கலைக்கழக மானியக்குழு திருக்குறளை மாணவர்களிடம் எடுத்துச் செல்லும் வகையில் பல்கலைக் கழக அளவிலான போட்டிகளை நடத்த அறிவுறுத்தியுள்ளது.

இதன் அடிப்படையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அனைத்து உறுப்பு, இணைப்புக் கல்லூரிகளில் கல்லூரி அளவிலான் போட்டிகள் நடத்தப்பட்டன. கல்லூரி அளவிலான போட்டிகளில் முதலிடம் வகித்த மாணவர்கள் பங்கு பெற்ற பல்கலைக் கழக அளவிலான 18-8-2015 அன்று காலை 10 மணி அளவில் பல்கலைக்கழக பொன்விழாவில் நடைபெற்றன. அன்று மாலை 3 மணி அளவில் "திருக்குறளும் இளைஞர்களும்" என்ற தலைப்பில் தமிழக அரசின் கருத்தரங்கம் நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற தமிழக அரசு வேளாண்மைத் துறை இயக்குனர் முனைவர். மு. ராஜேந்திரன் இ.ஆ.ப., அவர்கள் தனது சிறப்புரையில் இளைஞர்கள் போதை, கடத்தல், கற்பழிப்பு, தாய்நாட்டுக்கு எதிரான பணிகளுக்கு சமூக எதிரிகளால் ஈர்க்கப்படுகின்றனர். வள்ளுவர் வாக்கைப் பின்பற்றினால் கயமை, புறங்கூறுதல், பொறாமை, கல்லாமை, சோம்பல் போன்ற தீய குணங்களை விலக்கி நாட்டுக்கு பயனள்ள வகையில் தொண்டாற்றலாம். கடல் கடந்து திருக்குறள் பேறு பெற்றிருக்கிறது என்று கூறிய அவர் திருவள்ளுவர் ஒரு சட்ட வல்லுனர் என்ற தலைப்பில் முனைவர் பட்டப்படிப்பு ஆராய்ச்சி மேற்கொண்டதையும் விளக்கினார்.

உலகத்தில் அதிக மொழிகளில் மொழிப் பெயர்க்கப்பட்ட நூல் விவிலியம் எனப்படும் பைபிள் ஆகும். இதற்கு அடுத்த நிலையில் மொழி பெயர்க்கப்பட்டது காரல் மார்க்ஸ் எழுதிய மூலதனம் என்ற நூல் ஆகும். இதற்கு அடுத்த நிலையில் அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் நம்முடைய திருக்குறள் ஆகும். பைபிள் ஒரு சமய நூல் காரல் மார்க்ஸின் மூலதனம் ஓர் அரசியல் நூல் ஆனால் திருக்குறள் எந்த சமயத்தையும் சாராத, எந்த அரசியல் கருத்தியலையும் முன் வைக்காத நூல் இதுவே திருக்குறளின் சிறப்புக்குக் காரணம் ஆகும். திருக்குறளில் வேளாண்மை, வேளாண்மை சார்பு கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. வேளாண்மையை பாடத்திட்டமாக கொண்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவர்கள் இந்நூலின் சிறப்புக்களை அறிவியல் முறையில் அறிருந்திப்பது அவசியம் என்றும் கூறினார். திருக்குறளில் இன்றைய இளைய தலைமுறைக்கு ஏற்ற பல்வேறு அறக்கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் நட்பு குறித்த பல்வேறு கருத்துக்கள் இன்றைய இளைஞர்கள் முன்மாதிரியாக கொள்ளத்தக்கவை நட்பின் இலக்கணத்தையும், கூடாநட்பினால் ஏற்படும் தீய விளைவுகளையும் திருக்குறளைப் போல எளிமையாக எடுத்து சொல்லும் நூல் வேறு எதுவும் இருப்பதாக தெரியவில்லை. பொருள் பாலிலும், அறத்துப் பாலிலும் உள்ள அதிகாரங்களில் திருவள்ளுவர் ஏராளமான முற்போக்கு கருத்துக்களை கூறியுள்ளார். ஆகவே, திருக்குறள் இன்றைய இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டி நூல் ஆகும் என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) முனைவர். ச. மகிமைராஜா அவர்கள், தன் தலைமையுரையில் விவிலியம், தாஸ் கேபிடல் ஆகிய புத்தகங்களைத் தொடர்ந்து அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட மூன்றாவது புத்தகம் திருக்குறள் என்று கூறினார். வள்ளுவர் வழியைப் பின்பற்றினால் பல பிரச்சினைகள் தீர வாய்ப்புள்ளதாக கூறினார்.

பல்கலைக்கழக மானியக் குழுவின் அறிவுறுத்தலின் பேரில் இவ்விழா நடத்தப்பட்டது. விழாவில் முதுநிலை பட்டப்படிப்பு முதன்மையர் முனைவர். ச. மோகன், வேளாண் பொறியியல் முதன்மையர் திவாகர் துரைராஜ், மாணவர் நல இயக்குநர் முனைவர். ந. ரகுபதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

விழா ஏற்பாடுகளை தமிழ் உதவிப் பேராசிரியர் இரா. பாவேந்தன், மாணவர் மன்ற ஆலோசகர் முனைவர். ஜானவி ஆகியோர் செய்தனர். விழாவில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர். எம். ஆர். லதா, கல்லூரிகளிலிருந்து வந்த பேராசிரியர்கள் மற்றும் **300** மாணவ மாணவியர் பங்கு பெற்றனர்.

முன்னதாக, செல்வி. அமுதயாழினி வரவேற்புரை நல்கினார். செல்வி. கிருஷ்ணரூபிஹா நன்றியுரை ஆற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்


தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்
திருவள்ளுவர் விழா 2015
"இளைஞர்களும் திருக்குறளும்" கருத்தரங்கம்
பல்கலைக்கழக அளவிலான போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா
18-08-2015


கோயம்புத்தூர்


கோயம்புத்தூர்
18-08-2015


Medal Winners
ACADEMIC COUNCIL MEMBERS


ACADEMIC
COUNCIL
MEMBERS
VIPs